## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

### அ.வ.எண். 97/2009

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாந்தம்மாள் | மதம் | : |
| க/பெ | : அக்கையா | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**20.08.2024**

வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு 1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கு சாலம்மாள் என்ன உறவு என்றால் என் தாய் ஆவார். வாதி ரமேஷ் எனக்கு என்ன உறவு என்றால் என் மகன் ஆவார். வழக்கு சொத்தின் புல எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் எந்த ஊரில் உள்ளது என்றால் வீரராகவபுரத்தில் உள்ளது. தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் என் தாத்தா குப்பைய்யா என்பவருக்கு பாத்தியம் ஆகும். முனுசாமி யார் என்றால் என் அப்பா ஆவார். குப்பைய்யாவுக்கும் முனுசாமிக்கும் என்ன உறவு என்றால் அப்பா, மகன் ஆவார்கள். முனுசாமிக்கு எத்தனை மனைவிகள் என்றால் 2 மனைவிகள்.

2. முதல் மனைவி பெயர் என்ன என்றால் செங்கம்மாள் ஆகும். தனலட்சுமி யார் என்றால் முனுசாமியின் முதல் மனைவியின் மகள் ஆவார். முதல் மனைவிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரே மகள்தான். தனலட்சுமிக்கு மகன் உள்ளாரா என்றால் ரகுபதி என்ற மகன் உள்ளார். தனலட்சுமி, ரகுபதி உயிருடன் உள்ளார்கள் என்றால் தனலட்சுமி உயிருடன் இல்லை. ரகுபதி உயிருடன் உள்ளார். தனலட்சுமி இறந்து 40 வருடங்களுக்கு மேல் இருக்கும். ரகுபதி மனைவி உள்ளார் என்றால் சரிதான்.

3. முனுசாமியின் 2வது மனைவி சாலம்மாள் என்றால் சரிதான்.

அவர்தான் என் தாயார். சாலம்மாள்தான் என் மகனுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சாலம்மாளுக்கு சொத்துக்களில் முழு உரிமை இல்லாததால் செட்டில்மெண்ட் எழுதி வைக்க முடியாது என்றால் சரியல்ல. தாவா 8, 9, 10, 14 சொத்துக்களை 06.09.1989 ல் சாலம்மாள் வகையறா 1ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணனுக்கு விற்றுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. கிரையம் வாங்கிய தேதியில் இருந்து 8, 9, 10, 14 சொத்துக்களை 1ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன்தான் வரி கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

4. 1, 2, 4, 7 சொத்துக்களை 18.05.2005 ல் 3ம் பிரதிவாதி தனம்மாளுக்கு செல்லா கிருஷ்ணமூர்த்தி மற்றும் அவரது மகன் ரவி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் விற்றது தெரியாது. 1, 2, 4, 7 சொத்துக்களை 3ம் பிரதிவாதி தனம்மாள் கிரையம் வாங்கிய தேதி முதல் பட்டா மாற்றி வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. என் அம்மா வழக்கு 8ம் இலக்க சொத்தையும் மற்றும் புல எண்.261 ல் 73 செண்ட்டில் 13 செண்ட்டையும் கிணற்றில் பங்கையும் செல்ல கிருஷ்ணமூர்த்திக்கு 22.02.1972 ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

5. 22.02.1972 சாலம்மாள், முனுசாமி, முனுசாமியின் மகள், தனலட்சுமி மற்றும் கிருஷ்ணய்யா ஆகியோர் சேர்ந்து 5, 6, 11 இலக்க சொத்துக்களை சரோஜம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. சரோஜம்மாள் இறந்த பின்பு 10.11.1992 ல் சரோஜம்மாள் வாரிசுகள் நீலாவதி அம்மாள் என்பவருக்கு அதிகார முகவர் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. 5, 6, 11 இலக்க சொத்துக்களை 4ம் பிரதிவாதிக்கு நீலாவதியம்மாள் 29.11.1994 ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

6. அது முதல் 5, 6, 11 இலக்க சொத்துக்கள் 4ம் பிரதிவாதிக்கு பட்டா மாற்றி வரி செலுத்தி வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. தாவா மொத்த

சொத்துக்களும் என் அம்மா, அப்பா காலத்திலேயே விற்பனை செய்யப்பட்டுவிட்டது என்றாலும் ஏற்கனவே கிரையம் கொடுக்கப்பட்ட சொத்துக்களுக்கு பொய்யான ஆவணம் உற்பத்தி செய்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 15.12.2006 ல் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)